முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

### வினா

2000 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்ட **வரையறுக்கப்பட்ட ஏபிசி (தனி) கம்பனி** ஒரு வதிவுள்ள கம்பனியாவதுடன் அது தென்னந்தும்பு சம்பந்தமான பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. 2019 மார்ச் 31 இல் இருந்தவாறு கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் மொத்த ஒதுக்கங்கள் முறையே ரூபா 12,000,000/- மற்றும் ரூபா 1,850,000/- ஆகும்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட ஏபிசி (தனி) கம்பனியின்** சுருக்கப்பட்ட வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | குறிப்பு | ரூபா '000 |
|---|---|---|
| வருமானம் - ஏற்றுமதிகள் | | 632,000 |
| - உள்ளூர் விற்பனைகள் | | 84,000 |
| | | 716,000 |
| விற்பனைக் கிரயம் | | (486,000) |
| மொத்த இலாபம் | | 230,000 |
| ஏனைய வருமானம் | **1** | 6,598 |
| நிருவாகச் செலவுகள் | **2** | (134,500) |
| விநியோகச் செலவுகள் | **3** | (54,450) |
| நிதிச் செலவுகள் | **4** | (7,654) |
| வருமான வரிக்கு முந்திய இலாபம் | | **39,994** |

(1) **குறிப்பு 1 – ஏனைய வருமானம்:**

| | ரூபா '000 |
|---|---|
| வாடகை வருமானம் (மொத்தம்) | 480 |
| பங்கிலாப வருமானம் (தேறியது) | 215 |
| காணி விற்பனையிலிருந்து இலாபம் | 5,000 |
| விலைகோரப்பட்ட பங்குகள் விற்பனையிலிருந்து இலாபம் | 468 |
| நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் (மொத்தம்) | 435 |
| | **6,598** |

(2) **குறிப்பு 2 – நிருவாகச் செலவுகள்:**

நிருவாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

(2.1) ஆண்டிற்காகத் தாக்கல் செய்யப்பட்ட கணக்கீட்டுப் பெறுமானத் தேய்வு ரூபா 5,436,000/-.

(2.2) வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் லொறி விற்பனையால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 120,000/-.

(2.3) ஆண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 1,876,000/-.

(2.4) ஆண்டுக் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட பணிப்பாளர் கட்டணம் ரூபா 2,400,000/- ஆவதுடன் அது உ.போ.செ. (PAYE) வரிக்காகக் கருத்திலெடுக்கப்படவில்லை.

(2.5) களியாட்டத்திற்கான செலவுகள் ரூபா 135,000/-.

(2.6) சுகாதார ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக ஆண்டுக் காலப்பகுதியில் பிரதேச சபைக்குத் தண்டமாகச் செலுத்திய தொகை ரூபா 250,000/-.

(2.7) வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக புற்றுநோய் வைத்திய சாலைக்கு ரூபா 1,000,000/- உம் (இது தொடர்பாக வைத்தியசாலை பற்றுச் சீட்டொன்றை வழங்கியிருந்தது) விடுதியில் தங்கியுள்ளவர்களைப் பராமரிக்கும் அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 200,000/- பெறுமதியான பலசரக்குப் பொருட்களும் கம்பனியால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன.

(2.8) கம்பனியால் ரூபா 2,500,000/- செலவில் அதன் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கான ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இச்செலவினுள் ஆராய்ச்சி மேற்கொள்ளும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ஆராய்ச்சிகூட உபகரணங்கள் மீதான செலவு ரூபா 1,000,000/- உம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(2.9) கம்பனியின் விற்பனைக் குழுவினர், எதிர்பார்க்கும் கொள்வனவாளர்களுடனான பேச்சுவார்த்தைக்காக சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டனர். குழுவினருக்கான விமானச் சீட்டுக் கொள்வனவுக் கிரயம் ரூபா 248,000/-. மேலும் முகாமைப் பணிப்பாளரும் அவரது குடும்பத்தினரும் உல்லாசம் அனுபவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டுப் பயணமொன்றிற்கு ஏற்பட்ட செலவு ரூபா 600,000/-.

(2.10) வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்திற்கு வர்ணம் தீட்டுவதற்காக கம்பனி ஈட்டிய செலவு ரூபா 145,000/-.

(2.11) தொழில் நீதிமன்றில் கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வழக்கறிஞருக்கு 2018 டிசெம்பரில் கம்பனி செலுத்திய தொகை ரூபா 750,000/-. அந்தக் கொடுப்பனவின் மீது கம்பனி உரிய நிறுத்தி வைத்தல் வரியைச் செலுத்தவில்லை.

(3) **குறிப்பு 3 – விநியோகச் செலவுகள்:**

(3.1) ஊழியர் ஒருவரிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி ரூபா. 50,000/- பதிவழிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக கம்பனி, வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்தான நம்பிக்கை யில்லாக் கடனுக்காக ரூபா 120,000/- பொது ஒதுக்கம் ஒன்றை ஏற்பாடு செய்தது. மேலும் ரூபா 15,000/- வியாபாரக் கடனொன்று ஆண்டுக் காலப்பகுதியில் நம்பிக்கை யற்றதாக மாறிவிட்டதென மதிப்பிடப்பட்டது.

(3.2) விளம்பரச் செலவுகளுள் வர்த்தகத் தொலைக்காட்சிகளுக்கான கிரயம் ரூபா 1,520,000/- உம் புதிய தொழிலாளர்களை ஆட்சேர்ப்பதற்காக வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரக் கிரயம் ரூபா 25,000/- உம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(4) **குறிப்பு 4 – நிதிக் கிரயம்:**

(4.1) வரி வரவு கோருவதற்கான காலம் கடந்த காரணத்தால் பதிவழிக்கப்பட்ட பொருளாதார சேவைகள் கட்டணம் ரூபா 1,057,000/-.

(4.2) செயற்பாட்டு மூலதனத் தேவைக்காகப் பெறப்பட்ட வங்கிக் கடனுக்காகச் செலுத்தப்பட்ட கடன் வட்டி ரூபா 6,483,000/-.

(4.3) 2018 யூலை 01 ஆந் திகதி நிதிக் குத்தகை ஒப்பந்தமொன்றின் கீழ் 36 மாத காலப்பகுதிக்கு 5 மடிக்கணினிகள் பெறப்பட்டன. குத்தகைக்கான மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூபா 31,200/-. கம்பனி ஆண்டுக் காலப்பகுதியில் 9 தவணைக் கட்டணங்களைச் செலுத்தியிருந்தது. வருமானக் கூற்றுக்குத் தாக்கல் செய்யப்பட்ட குத்தகை வட்டி ரூபா 114,000/-.

(5) **குறிப்பு 5 – ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம்:**

(5.1) ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட கொள்வனவுகள்:

*(ரூபா '000)*

| சொத்து வகை | கிரயம் |
|---|---|
| மின்பிறப்பாக்கிகள் | 2,000 |
| அலுவலக தளபாடங்கள் | 450 |
| மோட்டார் கார் - முகாமைப் பணிப்பாளருக்கு | 2,800 |
| மோட்டார் லொறி | 4,360 |
| உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மென்பொருள் (மதிப்பிடப்பட்ட பயன்படுத்தக்கூடிய காலம் - 8 வருடங்கள்) | 420 |
| கணினிகள் (நிதிக் குத்தகை அடிப்படையில் பெறப்பட்டவை) | 840 |

(5.2) பின்வருவன 2018 மார்ச் 31 இல் இருந்த சொத்துக்களாகும்.:

*(ரூபா '000)*

| | கிரயம் | கொள்வனவு செய்யப்பட்ட வரி ஆண்டு |
|---|---|---|
| கட்டடம் | 12,465 | 2015/16 |
| இயந்திரங்கள் | 2,400 | 2016/17 |
| மோட்டார் லொறிகள் | 5,400 | 2016/17 |
| அலுவலக உபகரணங்கள் | 225 | 2017/18 |

(5.3) ஆண்டுக் காலப்பகுதியில் செய்யப்பட்ட விற்பனைகள்:

(i) 2016/17 ஆம் வரிமதிப்பாண்டில் ரூபா 2,800,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் லொறியொன்று 2018 யூன் 30 இல் ரூபா 1,750,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. பழைய லொறியைப் பிரதியீடு செய்வதற்காக புதிய லொறியொன்று 2018 யூலை 01 ஆந் திகதி ரூபா 4,360,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டது.

(ii) கம்பனி 2014 இல் பெறுமதியில்லாத பழைய கட்டடமொன்றுடன் காணியொன்றைக் கொள்வனவு செய்திருந்தது. முகாமையானது நீண்ட காலத்தில் பெறுமதி அதிகரிப்பின் மூலமான இலாபத்தைப் பெறுவதற்காக இக்காணியை ஒரு முதலீட்டுச் சொத்தாக வைத்திருந்தது. காணி விற்பனை செய்யப்படும் வரையும் கட்டடம் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. ஆண்டுக் காலப்பகுதியில் பெறப்பட்ட வாடகை ஏனைய வருமானங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 2018 டிசெம்பர் 31 இல் காணி ரூபா 30,000,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டது. காணியின் கொள்வனவுக் கிரயம் ரூபா 25,000,000/- ஆவதுடன் 2017 செப்ரெம்பர் 30 இல் அதன் சந்தைப் பெறுமதி ரூபா 28,000,000/- ஆகும்.

(5.4) மேலே விசேடமாகக் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் தவிர ஏனைய எல்லாச் சொத்துக் களுக்கும் வரி நோக்கங்களுக்காகப் பூரணமாக பெறுமானத் தேய்வளிக்கப்பட்டுள்ளன.

(6) கம்பனியின் கணக்கேடுகளின்படி, 2019 மார்ச் 31 இல் பின்வரும் பொறுப்புக்கள் காணப்பட்டன:

| | **ரூபா** |
|---|---|
| வங்கிக் கடன் | 41,700,000 |
| குத்தகைக் கடன்கொடுத்தோர் | 680,000 |
| | **42,380,000** |

(7) ஆண்டுக் காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட பணிக்கொடை ரூபா 1,345,000/-.

(8) 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட வரி விதிக்கத்தக்க வியாபார நட்டம் ரூபா 16,500,000/-.

(9) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு செலுத்தப்பட்ட பொருளாதார சேவைகள் கட்டணம் (ESC) ரூபா 3,580,000/-.

(10) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்குக் கம்பனி செலுத்திய காலாண்டுத் தவணைக்கட்டணங்கள் ரூபா 1,000,000/-.

(11) வட்டி, வாடகை மற்றும் பங்கிலாபம் மீது உரிய வீதத்தில் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டுள்ளது.

(12) 2017/18 இற்குரிய வருமான வரித் திரட்டின்படி முன்கொண்டு செல்லப்பட்ட பெயரளவிலான (Notional) வரி வரவு ரூபா 560,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **வரை. ஏபிசி (தனி) கம்பனியால்** செலுத்தப்பட வேண்டிய மீதி வருமான வரியினை **மதிப்பிடுக.**

--- --- ---

## விடை

**வரை. ஏபிசி (தனி) கம்பனி**
**வியாபார வருமானத்தைக் கணிப்பிடுவதற்கான குறிப்புகள்**
வரிமதிப்பாண்டு 2018/2019

| **வியாபார வருமானக் கணிப்பீடு** | **குறிப்பு தொடர்பு** | **ரூபா** <br> **+** | **ரூபா** <br> **-** |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்) | | 39,994,000 | |
| **கூட்டு:** | | | |
| சொத்துக்கள் மீது கணக்கீட்டு பெறுமானத் தேய்வு | | 5,436,000 | |
| மோட்டார் லொறி விற்பனை மீது கணக்கீட்டு நட்டம் | | 120,000 | |
| பணிக்கொடை ஏற்பாடு | | 1,876,000 | |
| பணிப்பாளர் கட்டணம் - உ.பொ.செ. தேவைகளுக்கு கருத்திலெடுக்காமையால் அனுமதிக்கப்படவில்லை – பிரிவு 10(2) இன் கீழ் | | 2,400,000 | |
| களியாட்டச் செலவுகள் | | 135,000 | |
| தண்டங்கள் | | 250,000 | |
| நன்கொடை (இலாபம் ஈட்டுவதில் ஏற்பட்ட செலவல்ல) | | 1,200,000 | |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகள் - ஆய்வுகூட உபகரணங்கள் அனுமதிக்கப்படவில்லை – பிரிவு 15 இன் கீழ் மூலதன விடுதொகை கோரப்பட்டுள்ளது | | 1,000,000 | |
| வெளிநாட்டுப் பிரயாணம் - விற்பனைக்குழு – அனுமதிக்கப்பட்டது. | | 0 | |
| வெளிநாட்டுப் பிரயாணம் - முகாமைப் பணிப்பாளர் - அனுமதிக்கப்படவில்லை. | | 600,000 | |
| திருத்தச் செலவுகள் (வர்ணம் பூசுதல்) – முதலீட்டு வருமானம் தொடர்பானது | | 145,000 | |
| சட்டத்தரணி கொடுப்பனவு நி.வை.வரி கழிக்கப்படவில்லை. | | 750,000 | |
| ஊழியர் கடன் பதிவழிப்பு | | 50,000 | |
| நம்பிக்கையில்லாக் கடன் விசேட ஒதுக்கம் | | 15,000 | |
| நம்பிக்கையில்லாக் கடன் பொது ஒதுக்கம் | | 120,000 | |
| விளம்பரம் - அனுமதிக்கப்பட்டது | | 0 | |
| பொருளாதார சேவைகள் கட்டணம் - கோரப்பட முடியாதது | | 1,057,000 | |
| கடன் வட்டி | **1.1** | 6,483,000 | |
| குத்தகை வட்டி | **1.1** | 114,000 | |
| வரிமதிக்கத்தக்க விதிப்பனவு (விற்பனை இலாபம்) தேய்மானத்திற்கு உட்படத்தக்க சொத்துக்களின் பெறுவனவின் மீது) | **1.3** | 70,000 | |
| **கழி: அனுமதிக்கத்தக்க கழிப்பனவுகள்** | | | |
| தேய்மானத்திற்கு உட்படத்தக்க சொத்துக்கள் மீதான மூலதன விடுதொகை | **1.2** | | 4,224,000 |
| <u>ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள்:</u> | | | |
| 6 ஆவது அட்டவணையின் கீழ் மேலதிகமாக 100% கோரப்படலாம் - நிலைபெயர்கால ஏற்பாடுகள் | | | 1,500,000 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | | | 1,345,000 |
| அனுமதிக்கத்தக்க நிதிச் செலவுகள் | **1.1** | | 6,467,800 |
| **கழி: முதலீட்டு வருமானம்** | | | |
| வாடகை வருமானம் | | | 480,000 |
| வட்டி வருமானம் | | | 435,000 |
| பங்கிலாப வருமானம் | | | 215,000 |
| விலைகோரப்பட்ட பங்குகளிலான முதலீட்டு விற்பனை இலாபம் | | | 468,000 |
| காணி விற்பனை மீதான இலாபம் | | | 5,000,000 |
| | | **61,815,000** | **20,134,800** |
| | | **41,680,200** | |
| கழி: முன்கொண்டு வரப்பட்ட வியாபார நட்டம் | | **(16,500,000)** | |
| **வியாபார வருமானம்** | | **25,180,200** | |

**வரை. ஏபிசி (தனி) கம்பனி**
**வருமான வரிக் கணிப்பீடு**
2018/19 ஆம் வரிமதிப்பாண்டு

| | | | குறிப்பு தொடர்பு | ரூபா |
|---|---|---|---|---|
| வியாபார வருமானம் | | | | 25,180,200 |
| முதலீட்டு வருமானம் | | | 2 | 2,770,000 |
| **மொத்த வரிவிதிக்கத்தக்க வருமானம்** | | | | 27,950,200 |
| | | | | |
| **கழி: தகைமைக் கொடுப்பனவும் நிவாரணங்களும்** | | | | |
| அரசாங்கத்திற்கான நன்கொடை | | | | (1,000,000) |
| அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனத்திற்கான நன்கொடை – பொருட்களாகக் கோர முடியாது | | | | - |
| **வரிவிதிக்கத்தக்க வருமானம்** | | | | **26,950,200** |
| | | | | |
| **செலுத்த வேண்டிய வருமான வரிக் கணிப்பீடு** | | | | |
| | **குறிப்பு தொடர்பு** | **வரிவிதி வருமானம்** | **வீதம்** | **வரி** |
| | | **ரூபா** | **@** | **ரூபா** |
| | | | | |
| முதலீட்டுச் சொத்துக்கள் தேறுதல் மீதான இலாபம் | 2.1 | 2,000,000 | **10%** | 200,000 |
| மீதி வரிவிதி வருமானம் | 3 | 24,950,200 | **14%** | 3,493,028 |
| **செலுத்த வேண்டிய மொத்த வரி** | | 26,300,200 | | **3,693,028** |
| | | | | |
| **கழி: வரி வரவுகள்** | | | | |
| | | **ரூபா** | | |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | | 3,580,000 | | |
| முன்கொண்டு வரப்பட்ட பெயரளவிலான வரிவிதிப்பு | | 560,000 | | |
| வட்டி மீதான நி.வை.வரி (435,000 x 5%) | | 21,750 | | |
| வாடகை மீதான நி.வை.வரி (480,000 x 10%) | | 48,000 | | |
| காலாண்டுத் தவணைக் கொடுப்பனவுகள் | | 1,000,000 | | 5,209,750 |
| **செலுத்த வேண்டிய மீதி வரி / (கொடுக்கப்பட வேண்டிய மீளளிப்பு)** | | | | **(1,516,722)** |

**வரை. ஏபிசி (தனி) கம்பனி**

**வியாபார வருமானக் கணிப்பீட்டிற்கான குறிப்புகள்**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டு

**(1.1) நிதிச் செலவு**

| | | | |
|---|---|---|---|
| நிதிச் செலவு | | 6,597,000 | |
| **இறைவரிச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் மெல்லிய மூலதனவாக்கத் திருத்தம்** | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | | 12,000,000 | |
| ஒதுக்கங்கள் | | 1,850,000 | |
| | A | 13,850,000 | |
| **நிதிப் பத்திரங்களுக்கு சாட்டத்தக்கதான நிதிச் செலவுகள்** | | | |
| நிதிப் பத்திரங்கள் மீது செலுத்த வேண்டிய தொகை | C | 42,380,000 | |
| **நிதிச் செலவுகளில் கோரத்தக்க அதிகூடிய தொகை** | D = [(A x 3) / C ]x B | **6,467,800** | |
| அடுத்த வருடத்திற்கு முன்கொண்டு சென்ற அனுமதிக்கப்படாத நிதிச் செலவு | | 129,200 | மீளச் சாட்டப்பட்டது |

**(1.2) தேய்மானத்திற்கு உட்படத்தக்க சொத்துக்கள் மீது மூலதன விடுதொகை :**

| **சொத்து வகை** | **கொள்வனவு ஆண்டு** | **தேய்மான அடிப்படை அல்லது குறைந்துசென்ற பெறுமதி WDV மு.கொ. (ரூபா)** | **வருடங்கள்** | **ஆண்டிற்கான விதிப்பனவு (ரூபா)** |
|---|---|---|---|---|
| ஆய்வுகூட உபகரணம் | 2018/19 | 1,000,000 | 5 | 200,000 |
| மின்பிறப்பாக்கிகள் | 2018/19 | 2,000,000 | 5 | 400,000 |
| அலுவலகத் தளபாடம் | 2018/19 | 450,000 | 5 | 90,000 |
| மோட்டார் கார் - முகாமைப் பணிப்பாளருக்கு | 2018/19 | 2,800,000 | not entitled, not a road vehicle | |
| மோட்டார் வாகனங்கள் | 2018/19 | 4,360,000 | 5 | 872,000 |
| உள்ளூரில் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் | 2018/19 | 420,000 | 8 | 52,500 |
| கணினிகள் - குத்தகை | 2018/19 | 840,000 | 5 | 168,000 |
| கட்டடங்கள் | 2015/16 | 12,465,000 | 10% | 1,246,500 |
| இயந்திரங்கள் | 2016/17 | 2,400,000 | 33.33% | 800,000 |
| மோட்டார் வாகனங்கள் | 2016/17 | 5,400,000 | | |
| கழி: விற்பனைகள் | | (2,800,000) | | |
| | | 2,600,000 | 20% | 520,000 |
| அலுவலக உபகரணங்கள் | 2017/18 | 225,000 | 33.33% | 75,000 |
| | | | | **4,224,000** |

**(1.3) தேய்மானத்திற்கு உட்படத்தக்க சொத்துக்கள் மீது வரிமதிக்கத்தக்க விதிப்பனவு மற்றும் சமச்சீராக்கும் விடுதொகை:**

| **விபரம்** | **சொத்தின் கிரயம்** | **கொள்வனவு ஆண்டு** | **பெற்ற தொகை** | **குறைந்து சென்ற பெறுமதி** | **வரிமதிக்கத்தக்க விதிப்பனவு** |
|---|---|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 2,800,000 | 2016/2017 | 1,750,000 | 1,680,000 | 70,000 |

**வரை. ஏபிசி (தனி) கம்பனி**
**வியாபார வருமானக் கணிப்பீட்டிற்கான குறிப்புகள்**
2018/19 ஆம் வரிமதிப்பாண்டு

**2. முதலீட்டு வருமானக் கணிப்பீடு :**

| | குறிப்புத் தொடர்பு | ரூபா | ரூபா |
|---|---|---|---|
| வாடகை வருமானம் | | 480,000 | |
| கழி: செலவுகள் - வர்ணம் தீட்டுதல் | | (145,000) | |
| | | 335,000 | |
| வட்டி வருமானம் | | 435,000 | |
| பங்கிலாப வருமானம் | | 215,000 | |
| விலைகோரப்பட்ட பங்குகளின் முதலீட்டு விற்பனையில் இலாபம் | | 468,000 | |
| காணி விற்பனையில் இலாபம் | | 2,000,000 | 3,453,000 |
| **கழி: வரிவிலக்கு / இறுதி நி.வை.வரிக் கொடுப்பனவு** | | | |
| பங்கிலாப வருமானம் | | 215,000 | |
| விலைகோரப்பட்ட பங்குகளின் முதலீட்டு விற்பனையில் இலாபம் | | 468,000 | (683,000) |
| **முதலீட்டு வருமானம்** | | | **2,770,000** |

**(2.1) முதலீட்டுச் சொத்து விற்பனையில் பெறப்பட்ட இலாபம் / நட்டம்:**

| விபரம் | கிரயம்/ 2017 செப்ரெம்பர் 30 இல் சந்தைப் பெறுமதி (ரூபா) | விற்பனைப் பெறுவனவு (ரூபா) | இலாபம் / நட்டம் (ரூபா) |
|---|---|---|---|
| காணி | 28,000,000 | 30,000,000 | 2,000,000 |

**3. வியாபார வருமானம் - குறைந்த வீதத்தில் வரி விதித்தல் :**

பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்யும் வியாபாரம் ஒன்றை முதன்மையானதாகக் கொண்டு நடாத்தும் கம்பனியொன்றின் வரிவிதிக்கத்தக்க வருமானம் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் 14 % இல் வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படும்.

| விபரம் | ரூபா |
|---|---|
| ஏற்றுமதி வருமானம் | 632,000,000 |
| உள்நாட்டு வருமானம் | 84,000,000 |
| ஏனைய வருமானம் | 6,598,000 |
| மொத்த வருமானம் | **722,598,000** |
| மொத்த வருமானத்தில் ஏற்றுமதி வருமானத்தின் சதவீதம் | 87% |

--- --- ---